**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திருமதி. M.S. வரலட்சுமி, பி.ஏ., பி.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.465/2025**

**(CNR.NO.TNVP02-000806-2025)**

நாராயணசாமி ரெட்டியார் .... வாதி

/எதிர்/

சக்திவேல் .... பிரதிவாதி

இவ்வழக்கு 14.07.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 24.07.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 11.02.2026 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.A.மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகியும் அவரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**தீர்ப்புரை**

தாவா பிராமிசரி நோட்டுத்தொகையான ரூ.4,91,035/- மற்றும் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு பின் வட்டியும் மற்றும் வியாஜ்ஜிய செலவும் வாதிக்கு

பிரதிவாதியின் குடும்ப ஸ்தாவர ஜங்கம சொத்துக்களாலும் கிடைக்கும்படி தீர்ப்பளிக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**2. வழக்குரை சுருக்கம்:-**

2023ம் வருடம் ஜனவரி மாதம் 03ம் தேதியன்று வாதியிடமிருந்து தகுந்த பிரதிபிரயோஜனமாக ரூ.4,00,000/-ஐ பிரதிவாதி அவரது குடும்ப செலவிற்காகவும் மற்றும் வீட்டு மனை வாங்குவதற்காகவும், கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.1/- வீதம் சேர்த்து வரக்கூடிய அசல் மற்றும் வட்டி தொகையை வாதி வேண்டும்போது வாதியிடமாவது அல்லது வாதியின் அதிகாரம் பெற்றவர்களிடமாவது கொடுத்து பைசல் செய்வதாய் ஒப்புக்கொண்டு பிரதிவாதி, வாதியின் பெயருக்கு தாவா பிராமிசரி நோட்டை கஞ்சனூர் கிராமத்தில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அதன் பின் வாதி பிராமிசரி நோட்டில் கண்ட தொகையை கொடுத்து கடனை பைசல் செய்யும்படி பிரதிவாதியை பலமுறை நேரிலும், ஆட்கள் மூலமாகவும் கேட்டும் பிரதிவாதி வாதிக்கு சேரவேண்டிய தொகையினை கொடுத்து பைசல் செய்யாமல் வீண் காலதாமதம் செய்து வருகிறார் என்றும் மேற்படி தாவா பிராமிசரி நோட்டுக்குண்டான அசல் மற்றும் வட்டித் தொகைகளை கொடுத்து பைசல் செய்யும்படி வாதி பிரதிவாதியை பலமுறை நேரிலும் ஆட்கள் மூலமாகவும் கேட்டும் மேற்படி வழக்கு பிரதிவாதி தொகையை கொடுத்து பைசல் செய்யாததால் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு கடந்த 10.06.2025 அன்று அறிவிப்பு அனுப்பி 12.06.2025 பிரதிவாதி அந்த அறிவிப்பினை பெற்றுக்கொண்டு தொகையை கொடுத்து பைசல் செய்யாமல் வீண் காலதாமதம் செய்து வருவதால் வாதி இந்த தாவாவை பிரதிவாதி பேரில் சமூகம் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி வழக்கு பிரதிவாதி விவரசாமி என்றும் ஆகவே தாவா பிராமிசரி நோட்டுக்கு 9% வீதம் வாதி வட்டி கோரப்படுகிறது

என்றும் கூறி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகியும் அவரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் கடந்த 07.02.2026 அன்று அவர் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துள்ளார். வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5. தீர்வுக்கான பிரச்சனை :-**

இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா அல்லது இல்லையா?_என்பதே இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை ஆகும்.

**6. தீர்வு :-**

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் பிரதிவாதி வாதியிடம் கடந்த 03.01.2023 அன்று ரூ.4,00,000/- ரொக்கத்தை கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு ரூ.100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ.1/- வீதம் ஆக சேர்த்துக் கூடிய அசல் வட்டி தொகையை வாதி வேண்டும் போது வாதியிடமாவது அல்லது வாதி அதிகாரம் பெற்றவரிடமாவது ரொக்கமாய் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு வாதி பேருக்கு பிரதிவாதி பிராமிசரி நோட்டை ரூ.4,00,000/-க்கு கஞ்சனூர் கிராமத்தில் எழுதிக் கொடுத்தார் என்றும், தாவா பிராமிசரி நோட்டை பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிறகு தாவா பிராம்சரி

நோட்டுப்படி சேர வேண்டிய அசல் வட்டி தொகையை கொடுத்து பைசல் செய்யும்படி வாதி பிரதிவாதியிடம் பல முறை நேரில் கேட்டதில், அதற்குப் பிரதிவாதி, தாவா பிராமிசரி நோட்டுபடி சேர வேண்டிய அசல்வட்டி தொகையை கொடுத்து பைசல் செய்யாமல் வீண் விரையம் செய்து வந்தார் என்றும் பின்னர் அந்த கடனை நோட்டிஸ் மூலம் கேட்டும் பிரதிவாதி கடனை திருப்பி தரவில்லை என்றும் வாதி தன் வழக்கை வா.சா.1 சாட்சியம் மூலம் மெய்பித்துள்ளார் என்றும் கூறி வழக்கை தீர்ப்பு செய்யுமாறு வேண்டி வாதிட்டார்.

7. வாதி தரப்பு வாதமும் வழக்கு ஆவணமும் கவனத்துடன் பரிசீலித்து கருத்தில் கொள்ளப்பட்டது.

8. வா.சா.1/வாதி தனது முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்கு மூலத்தில் வழக்குரை சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார்.

9. வா.சா.ஆ.1 தாவா பிராமிசரி நோட்டை கருத்தில் கொண்டதில் பிரதிவாதி வாதியிடம் இருந்து ரூ.4,00,000/-ஐ கடனாக பெற்று தாவா பிராமிசரி நோட்டை 03.01.2023 அன்று வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்திருப்பதும் அதற்காக பிரதிவாதி எவ்வித தொகையும் வரவு வைக்காமல் இருப்பதும் புலனாகிறது.

10. வா.சா.ஆ.2 அறிவிப்பு மூலம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு தாவா பிராமிசரி நோட்டு பணத்தை கேட்டு 10.06.2025 தேதியிட்டு அறிவிப்பு அனுப்பியிருப்பது புலனாகிறது.

11. வா.சா.ஆ.3 அஞ்சலக ஒப்புகை அட்டை மூலம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டிருப்பது புலனாகிறது.

12. பிரதிவாதி வழக்குரை சங்கதிகளை மறுத்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அவர் வா.சா.1 மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சாட்சிய சான்றாவணங்களை குறுக்கு விசாரணை செய்து மறுக்கவில்லை. அவர் வா.சா.ஆ.1 புரோநோட் கடன் நிலுவையை செலுத்தவும் இல்லை. எனவே வாதி பிரதிவாதிக்கு எதிராக தனது வழக்கை தன் தரப்பு சாட்சியங்கள் மூலம் மெய்பித்துள்ளது புலனாகிறது.

13. மேலே கண்ட காரணங்களினால் வாதி தரப்பு வாதம் ஏற்கப்பட்டு இந்த வழக்கானது வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.4,91,035/- மற்றும் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியும் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு தீர்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும் வரை 6% p.a பின்வட்டியும் பிரதிவாதியின் குடும்ப ஸ்தாவர ஜங்கம சொத்துக்களால் வாதிக்கு கிடைக்கும்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** வழக்கானது வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.4,91,035/- மற்றும் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியும் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு தீர்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும்

வரை 6% p.a பின்வட்டியும் பிரதிவாதியின் குடும்ப ஸ்தாவர ஜங்கம சொத்துக்களால் வாதிக்கு கிடைக்கும்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யப்படுகிறது. தொகை செலுத்த கால அவகாசம் 2 மாதங்கள்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 16.03.2026 திங்கள்கிழமை ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

M S VARALAKSHMI Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**வாதி தரப்பு சாட்சிகள் :-**

வா.சா. 1 திரு.நாராயணசாமி (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.01.2023 | பிரதிவாதி ரூ.4,00,000/- ரொக்கம் பெற்றுக்கொண்டு வாதி பேருக்கு எழுதிக்கொடுத்த தாவா பிராம்சரி நோட்டு (அசல்) |
| வா.சா.ஆ.2 | 10.06.2025 | வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.3 | - | பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை)

M S VARALAKSHMI Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.